**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 17.07.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் கோயம்புத்தூர் KMCH இணைந்து 15.07.2023 அன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகவளாகத்தில் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.. வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல் மற்றும் வேளாண் மேலாண்மை ஆகிய துறைகளைச் சேர்ந்த சுமார் 600 இளங்கலை மாணவர்கள் பங்கேற்றனர். பல்கலைக்கழகத்தின் மாணவர் நலன் மையத்தின் முதன்மையர் முனைவர் என்.மரகதம் வரவேற்புரையாற்றினார் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி பற்றிய அறிமுகவுரையும் வழங்கினார். KMCH, கோயம்புத்தூர் மருத்துவர்கள் Dr.விஸ்வகுமார்பிரபாகரன், பல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் மற்றும் Dr.அருள்ராஜ்ராமகிருஷ்ணன், ஹெபடாலஜிஸ்ட் & எண்டோஸ்கோபிஸ்ட் ஆகியோர், புள்ளி விவரங்கள் மற்றும் ஊக்கமளிக்கும் வீடியோக்கள் மூலம் மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர். மேலும் மாணவ, மாணவியர் மருத்துவர்களுடன் கலந்துரையாடி, உடல் உறுப்பு தானம் குறித்த தங்கள் சந்தேகங்களுக்கு விளக்கம் பெற்றனர். விழிப்புணர்வு சொற்பொழிவிற்கு பின் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவரும் உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வு பெற்றதன் அடையாளமாக பெரிய பதாகையில் கையெழுத்திட்டனர். பல்கலைக்கழகத்தின் நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் அலுவலர்கள் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**